இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 01-02-2025

# களங்கம் கற்பிக்க வேண்டாம்!

வேங்கை வயல் விவகாரத்தை வைத்து தவறான பரப்புரையை சில ஊடகங்கள் செய்துள்ளன. குறிப்பாக ஆனந்த விகடன், தமிழ் இந்து நாளிதழின் தலையங்கங்களும், ஜூனியர் விகடன் இதழில் வெளியாகி உள்ள கற்பனைக் கட்டுரையும் அரசின் மீது களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. அந்த புலனாய்வுப் புலிகள், வேங்கை வயல் தண்ணீர் தொட்டியில் மலம் கலந்தது யார் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லி இருக்கலாமே!

மதுரை உயர்நீதிமன்ற நீதியரசர் நிர்மல் குமார் அவர்கள், “இந்த வழக்கில் அனைத்து மின்னணுப் பதிவுகள், அறிவியல் பதிவுகளை அரசுத் தரப்பில் முன்னிலையான தலைமை குற்றவியல் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த வழக்கில் நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்க முயற்சிக்க வேண்டாம்” என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அரசியல் ஆக்கிக் கொண்டிருக்கின்றன இந்த ஊடகங்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கை வயல் கிராம குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாகவும் இக்கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிலர் வாந்தி மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாகவும், காவேரி நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மீது ஏறிப் பார்த்ததில், மேல்நிலை நீர்த்தேக்க நீரில் மலக்கழிவுகள் மிதப்பதாகவும் முதலில் செய்திகள் வெளியானது.

இதில் எதுவும் உண்மை இல்லை. மலம் கலந்து விட்டதாக பொய்ச் செய்தி பரப்பப்பட்டு, அதன்பிறகு மலம் கலக்கப்பட்டது என்பதை காவல் துறையின் விசாரணை உறுதி செய்துள்ளது.

வெள்ளானூர் காவல் நிலையத்தில் 26.12.2022 ஆம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கானது 14.01.2023 அன்று தமிழ்நாடு குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது. இந்த விசாரணையை மிகக் கவனமாகக் கையாண்டது காவல் துறை.

சாதி வன்மத்துடன் இச்செயல் செய்யப்பட்டதா? அல்லது அரசியல் மோதலா? தனிப்பட்ட பழிவாங்கும் முயற்சியா? என்று பல்வேறு கோணத்தில் விசாரணையானது நடைபெற்றது. விசாரணையின் முடிவை காவல் துறை வெளியிட்ட அறிக்கை தெளிவாகச் சொல்கிறது.

“சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, 02.10.2022 அன்று வேங்கைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பு குறித்து கேள்வி எழுப்பியதற்காக முத்துக்காடு ஊராட்சித் தலைவர் பத்மா என்பவரின் கணவர் முத்தையா என்பவர் கிராமசபைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு காவல் துறை ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்றும் காவலர் முரளிராஜாவின் தந்தை ஜீவானந்தம் என்பவரை அவமானப்படுத்தும் விதமாகத் திட்டியுள்ளார். இச்சம்பவத்திற்குப் பழிவாங்கும் வகையில் முரளிராஜாவால் இச்செயல் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டது என்பது காவல் துறையின் விசாரணையின் மூலம் ஆதாரப்பூர்வமாக புலனாகியுள்ளது” என்கிறது காவல் துறையின் அறிக்கை.

“இச்சம்பவத்தில் முரளிராஜா, சுதர்ஷன், முத்தையா, ஆர்.முத்துகிருஷ்ணன் மற்றும் பலரின் கைப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு, தமிழ்நாடு தடயவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது, அவற்றில் இந்தச் சம்பவம் தொடர்பான பல புகைப்படங்களும், உரையாடல்களும் அழிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இந்தத் தகவல்கள் அனைத்தும் தொழில்நுட்ப உதவியோடு மீட்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில், இச்சம்பவத்தில் அவர்களுக்குள்ள தொடர்பு உறுதி செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான விசாரணையில் பெறப்பட்ட புகைப்படங்கள், செல்போன் உரையாடல்கள், வீடியோ ஆதாரங்கள், தடயவியல் அறிக்கை, மருத்துவ அறிக்கைகள், புலனாய்வு அதிகாரியால் செய்யப்பட்ட செயல்முறை விளக்கங்களின் முடிவுகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அறிக்கை, வல்லுநர்களின் கருத்துகள் மற்றும் சாட்சிகளின் அறிக்கைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்ததின் அடிப்படையில், புலன் விசாரணை முடிக்கப்பட்டு முரளிராஜா, சுதர்சன், முத்துகிருஷ்ணன் ஆகிய மூவர் மீதும் 20.01.2025 அன்று நீதிமன்றத்தில் சி.பி.சி.ஐ.டி. சார்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.” என்று காவல் துறை அறிக்கை தெளிவாகச் சொல்லி இருக்கிறது.

**இந்த வழக்கில் மொத்தம் 389 சாட்சிகளிடம் காவல் துறை விசாரணை நடத்தி இருக்கிறது. 196 பேரின் செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 87 டவர் லொகேஷன் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 31 பேரிடம் டி.என்.ஏ. பரிசோதனை செய்யப் பட்டுள்ளது. இந்த போன்களில் இருந்து அழிக்கப்பட்ட படங்கள், வீடியோக்கள் மீட்கப்பட்டன. மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள், அங்கிருந்தபடி அவர்கள் பேசிய செல்போன் எண்கள் என அனைத்தும் எடுக்கப்பட்டு விட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றவர்களிடம் பேசிய ஆடியோக்கள் ஆதாரமாக உள்ளது. யாரிடம் பேசினார்களோ அவர்களது குரல் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் அரசு தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா விரிவாக விளக்கி இருக்கிறார்.**

“குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்ணீர்த் தொட்டியில் ஏறிப் பார்ப்பதற்கு முன்பு வரை தொட்டியில் எந்தக் கழிவும் கலக்கப்படவில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டது. இரவு 7.30 மணிக்கு மேல்தான் கழிவு கலக்கப்பட்டுள்ளது. கழிவு கலக்கப்பட்ட தண்ணீர் யாருக்கும் விநியோகம் செய்யப்படவில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது” என்று மதுரை உயர்நீதிமன்றத்தில் அரசின் சார்பில் சொல்லப்பட்டுள்ளது.

இந்த விசாரணை அறிக்கை தவறானது என்றால் அதில் எந்த வகையில் தவறு இருக்கிறது என்பதைச் சொல்லட்டும். ஆனால் பூடகமாக, தங்களுக்கு ஏதோ உண்மை தெரியும் என்பதைப் போல கற்பனை உலகத்தில் எதற்காக எழுத்துக்களை உதிர்க்க வேண்டும்? அரசாங்கத்துக்கு களங்கம் கற்பிக்க வேண்டும்? இவர்கள்தான் குற்றத்தில் தொடர்புடையவர்கள் என்று காவல் துறை சொன்னால், ‘இவர்களுக்குத் தொடர்பில்லை’ என்று ஏதாவது ஆதாரம் வைத்துள்ளீர்களா? அல்லது உண்மையான குற்றவாளிகளை பொதுவெளியில் யாராவது சொல்லி, அவர்களை காவல் துறை காப்பாற்றி இருக்கிறதா?

இது தொடர்பாக உங்களிடம் ஏதாவது ஆதாரம் இருக்குமானால் புலனாய்வு அமைப்பிடம், விசாரணை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கலாம் என்று உயர்நீதிமன்றம் சொல்லி இருக்கிறது. அப்படி ஏதாவது தகவல் தெரியுமானால் சொல்லுங்கள்.

**‘யாரையோ காப்பாற்ற வேண்டும் என்ற அவசியம் தி.மு.க. அரசுக்கு எதனால் இருக்க முடியும்? இவ்வளவு களங்கம் சுமந்து காப்பாற்ற வேண்டிய அளவுக்கு யார் இதில் தொடர்பில் இருந்திருக்க முடியும்? இப்படி நடந்து கொள்வதற்கு தி.மு.க. அரசுக்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்க முடியும்?’ என்ற குறைந்தபட்சக் கேள்வியை உங்கள் மனச்சாட்சியிடம் கேளுங்கள். நிச்சயம் விடை கிடைக்கும்.**

**எதையாவது சொல்லி தி.மு.க. அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதும், இப்படி எழுதி தங்களை மனித உரிமைப் போராளிகளாகக் கணக்குக் காட்டிக் கொள்வதும்தான் இத்தகைய ஊடகங்களுக்கு அவசியமாக இருக்கலாம். தி.மு.க. அரசுக்கு எந்த அவசியமும் இல்லை. சட்டம் அதன் கடமையை மட்டும் ஒழுங்காகச் செய்திருக்கிறது.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட தண்டையார்பேட்டையில் 21.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், திரு.வி.க.நகர், கன்னிகாபுரத்தில் 12.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.75 ஏக்கர் பரப்பளவில் 20,315 சதுர அடியில் தரைதளம் மற்றும் 2 தளங்களாக கட்டப்பட்டு வரும் விளையாட்டு மைதானம் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வக்பு மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்

# யு.ஜி.சி.யின் புதிய விதிமுறைகள் குறித்து விவாதிக்க வேண்டும்

## மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 1-

வக்பு சட்டத்திருத்த மசோதா குறித்து நாடாளு மன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று மக்க ளவை தி.மு.க. குழு தலை வர் டி.ஆர்.பாலு வலியுறுத் தியுள்ளார்.



டெல்லியில் நடை பெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, மக்களவை திமுக குழு தலைவர் டி.ஆர். பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கூட்டாக செய்தியாளர் களை சந்தித்தனர். அப் போது பேசிய டி.ஆர்.பாலு, வக்பு மசோதா விவகாரத்தில் நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் எதிர்க்கட்சிகளின் திருத்தங்களை ஏற்கவில்லை என்றும் மசோதா குறித்து நாடாளுமன்றத்தில் விவா திக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், யுஜிசி புதிய விதிமுறைகள், ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்துமீறல், சாதிவாரி கணக் கெடுப்பு, வெள்ள நிவார ணம், மீனவர் பிரச்சனை உள்ளிட்டவை குறித்து நாடாளுமன்றத்தில் விவா திக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**திருச்சி சிவா**

தொடர்ந்து பேசிய மாநி லங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா, ஒன் றிய பா.ஜ.க. ஆட்சியில், எதிர்க்கட்சிகளின் கவன ஈர்ப்பு தீர்மானங்கள் மீது நாடாளுமன்றத்தில் விவா தம் நடத்த அனுமதிப்பது இல்லை என்று குற்றஞ் சாட்டினார்.

### மகாத்மா காந்தி நினைவு நாளை அரசியலாக்குவதைத் தவிர்த்து –

# நல்லிணக்கத்தை வளர்ப்பதில் ஆளுநர் கவனம் செலுத்தட்டும்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிக்கை!

சென்னை, பிப்.1-

**மகாத்மா காந்தி நினைவு நாளை அரசியலாக்குவதைத் தவிர்த்து, மக்களிடையே நல்லி ணக்கத்தை வளர்க்க கவனம் செலுத்துங்கள் ஆளுநரே! என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமி நாதன் அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தியின் நினைவு தினம் நடத்துவது தொடர்பாக ஆளுநரின் கருத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். “காந்தி மண்டபத்தில் காந்தி நினைவு நிகழ்வை நடத்தாமல் அருங்காட் சியகத்தின் ஒரு மூலையில் நடத் துவதில் ஏதேனும் அர்த்தமுள் ளதா?” என கேள்வி எழுப்பி யிருக்கிறார் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள்.

பாரம்பரியமாக, காந்தி ஜெயந்தி கொண்டாட்டங்கள் மற் றும் தியாகிகள் தின அனுசரிப்புகள் மெரினா கடற்கரை காந்தி சிலைக்கு அருகில் மட்டுமே நடத் தப்பட்டு வருகின்றன. இருப்பி னும், மெரினா கடற்கரை சாலை யில் மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால், 2022-ஆம் ஆண்டு தமிழக அரசு எழும்பூர் அருங்காட்சியக வளா கத்திற்குள் மகாத்மா காந்தியின் புதிய சிலையை நிறுவியது.

அன்று முதல் மகாத்மா காந்தி பிறந்தநாள் மற்றும் தியாகிகள் தின அனுசரிப்புகள் இரண்டும் எழும்பூர் அருங்காட்சியக காந்தி



சிலை முன்புதான் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் கடந்த ஆண்டுகளில் எழும்பூரில் நடந்த இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

பாரம்பரியமிக்க எழும்பூர் அருங்காட்சியகத்தின் வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அஞ்சலி செலுத்தியிருக் கிறார்.

பாந்தியன் சாலையை ஒட்டியி ருக்கும் அந்த அருங்காட்சிகத்தின் பிரதான நுழைவு வாயில் முன்பு இருக்கும் காந்தி சிலை முன்புதான் அஞ்சலி நிகழ்வு நடந்தேறியிருக்கி றது. ஆளுநர் குறிப்பிடுவது போல அருங்காட்சியகத்தின் ஒரு மூலை யில் நடக்கவில்லை என்பதை முதலமைச்சர் அஞ்சலி செலுத்திய புகைப்படத்தை பார்த்தாலே தெரி யும். பின்னணியில் பாந்தியன் சாலையும் மேம்பாலமும் புகைப் படத்தில் தெரியும். ஆனால், ஆளுநர் கண்களுக்கு வெறும் அவதூறு தான் தெரியும்.

காந்திஜி தனது வாழ்நாளில் திராவிட சித்தாந்தத்தைப் பின்பற்று பவர்களால் கடுமை யாக எதிர்க்கப்பட்டு கேலி செய்யப் பட்டார். ஆனால் இன்றும் அவர் தொடர்ந்து கேலி செய்யப்பட வேண்டுமா?” எனவும் கேட்டிருக் கிறார் ஆளுநர். 1947 ஆகஸ்ட் 15-ம் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்த போது, திராவிட கழக பொதுச்செயலாளராக இருந்த அண்ணா, ‘சுதந்திர தினம் இன்ப நாள்’ என சொல்லி, பிரிட்டிஷா ருக்கு ஆதரவானவர்கள் என்கிற பழி விழுந்துவிடாமல் பாதுகாத் தார்.

அந்த அண்ணாவின் வழி வந்த நாங்கள் தேசத்தையும் தேச பிதாவையும் நேசிப்பவர்கள். தேசப்பிதாவை கொன்றவர்களை கொண்டாடுகிறவர்கள் அல்ல நாங்கள்.

காந்தி ஏன் கொல்லப்பட்டார்? அவரை கொன்றது யார்? என்பது எல்லாம் ஆளுநருக்கு தெரியும் தானே! இன்று தேசப்பிதா மறைந்த தினம் மட்டுமல்ல, இந் துத்துவா தீவிரவாதியால் மகாத்மா காந்தி கொல்லப்பட்ட தினமும் என் பது வரலாறு. மதவெறிக்காக காந் தியை கொன்றவர்கள் இன்று ரத்த பசியோடு அலைந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களை எதிர்த்து ஆளுநர் குறிப்பிடும் திராவிட சித் தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் தான் களமாடிக் கொண்டிருக்கி றார்கள். மகாத்மா காந்தியின் கொலைக்குப் பின்னால் இருந்த வர்களையும் அமைப்பையும் ஆத ரிப்பவர்களின் நோக்கங்களை தமிழக மக்கள் நன்கு அறிவார் கள். 2024 நாடாளுமன்றத் தேர் தல் நேரத்தில் தனியார் ஊடகத் திற்கு பேட்டி அளித்த பிரதமர் மோடி, “மகாத்மா காந்தியைப் பற்றி உலகினர் யாருக்கும் தெரி யாது. ‘காந்தி’ என்ற திரைப்படத்திற்குப் பிறகே தெரிந் தது” என சொல்லி காந்தியை சிறு மைப்படுத்திய போது ஆர்.என். ரவி எங்கே போனார்?

2019-ஆம் ஆண்டு உத்தர பிரதேசம் அலிகாரில் உள்ள இந்து மகா சபை அலுவலகத்தில் மகாத்மா காந்தியின் உருவ பொம் மையை துப்பாக்கியால் சுட்டு தீ வைத்த பூஜா சகுன் பாண்டேவை ஆளுநர் ரவி கண்டித்திருக் கிறாரா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசைவிட ஆளுநர் முக்கி யமானவர் அல்ல. மன்னராக, ஜமீன்தாராக நினைத்துக் கொண்டு அதிகாரம் செய்யும் மன நோயில் இருந்து ஆளுநர் விடுபட வேண்டும். இந்தப்பிரச்சினையை அரசியலாக்குவதைத் தவிர்த்து, தமிழக மக்களிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப் பதில் கவனம் செலுத்துமாறு ஆளு நரை கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.